بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**Friday Sermon Date 08-08-2014**

# God Protects the Muttaqi

# முத்தகியை இறைவன் பாதுகாக்கின்றன்

***HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)***

உலக மக்கள் அனைவருக்கும் சலாம் கூறிய பிறகு தஷ்ஹீதும், தஅவ்வசும் அல் பாத்திஹாவும் ஓதி ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் கீழ்வருமாறு கூறினார்.

இஸ்லாமின் சட்ட அமைப்புக்கு ஏற்றவார் ஒருவர் வாழ்கையினைப் பேணிக் கொண்டால், அந் நபரின் இயல்பினை ''தக்வா'' என கூறலாம். இறைக் கட்டளைகளுக்கு ஏற்றவார், தனது முழு வாழ்கையையும் தக்வா பாதுகாக்கின்றது. ஹஸ்ரத் முஹமது முஸ்தபா (ஸல்) வின் நடைமுறையை அந்நபர் அவனது வாழ்கையில் எற்படுத்திக் கொள்கின்றான். அவ்வாறு ஒரு நபர் தனது வாழ்கையை இந்த உன்னதமான இயல்புகளால் அலங்கரித்துக் கொண்டால் அந்த நபரை ஒரு **முத்தகி** என கூறிடலாம்.

இறையச்சமுள்ள அதாவது முத்தகியான ஒரு மனிதனுக்கு இந்த தற்காலிகமான உலக வாழ்கையில் நல்ல நிலையில் வாழ்வதற்கான பாக்கியம் எப்போதும் கிடைத்திடும். எல்லாம் வல்ல அல்லாஹ் திருக் குர் ஆன் மூலமாக கூறுகின்றான்.

**''ஆணாயினும் பெண்ணாயினும் மூ.்.ம்மினாகயிருந்து யார் நற்செயல்கள் செய்தாலும் நிச்சயமாக நாம் அவர்களை மணமிக்க தூய வாழ்கையில் வாழச் செய்வோம். இன்னும் அவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றில் இருந்து மிகவும் அழகான கூலியை நிச்சயமாக நாம் கொடுப்போம்'' (16-98)**

அவர்கள் எதிர்க் கொள்ளுகின்ற துயரங்கள்யாவும், திடீரென விலகிக் கொள்கின்ற துயரங்களேயாகும். காரணம் இவ்வுலக வாழ்கை சிறு காலத்திற்காக மட்டும் நிலை கொள்வதே என்று அவர்கள் புரிந்துக் கொள்கின்றார்கள். ஆகயால் துயரங்களும் அவ்வாறே தற்காலிகமேயாகும். இந்த துயரங்கள் சிறு நாள்களுக்கு மட்டும் என்று பகுத்தறிந்துக் கொள்வது துயரங்களில் இருந்து மீட்ப்பிற்கும் அமைதியைப் பெற்றுக் கொள்வதற்குமான வழியாகும். ஒரு முஸ்லீம் என்ற நிலையில், அவர் எதிர் கொள்கின்ற அனைத்து வகை சூழ் நிலைகளும் அல்லாஹ்வின் விதிப்படி நிகழுகின்ற விஷயமென அவர் புரிந்துக் கொள்கின்றார். ஒரு பக்தரான முஸ்லீம் எல்லா வல்ல அல்லாஹ்வின் விதி படி நிகழுகின்ற விஷயங்களில் திருப்தியுடையவனாகயிருப்பான். அவ்வாறு திருப்தியுடையவனாக இருக்க வேண்டியது அவனது கடமைகளில் உட்பட்டதாகும்.

உதாரணமாக அல்லாஹ்வின் ஒரு தூதரை எடுப்போம். அல்லாஹ் அன்னாரைத் தேர்ந்தெடுகின்ற போது, அன்னார் அனைத்தும் அல்லாஹ்வின் விருப்பத்திற்காகவே சமர்ப்பிக்கின்றார். மாறாக அன்னார் கூறிக் கொள்ள மாட்டார். ஓ அல்லாஹ் எதற்காக என்னை தேர்ந்தெடுத்தாய்? மக்கள் என்னைப் பற்றி என்ன கூறுவார்கள்? நான் ஒரு பொய்யாளர் என அவர்கள் கூறுவார்கள் அல்லவா? நான் ஒரு மந்திரவாதி என அவர்கள் சொல்லுவர்கள் அல்லவா? நான் குடும்பங்களுக்கு குழப்பம் ஏற்படுத்த வந்தவன் என அவர்கள் பரிகசிப்பார்கள் அல்லவா? அவ்வாறு பலதும் கூறிக் கொள்ளுவார்கள் என்றொன்றும் தூதர் சொல்வதில்லை. அல்லாஹ்வின் தூதனைத் தேர்ந்தெடுப்பது அல்லாஹ்வே ஆவான். அல்லாஹ் அவனது தூதனைத் தேர்ந்தெடுக்கும் போது அவனுக்கு நன்றாக தெரியும் தனது தூதர் எத்தனை நாள் வாழ்வார் என. 100 வருடமோ அல்லது 900 வருடமோ? ஆனால் ஒரு விஷயம் உறுதியாகும். அல்லாஹ் அவனது தூதனை கைவிட்டுக் கொள்ள மாட்டான். அவனது தூதுச் செய்தியை முழுமைப்படுத்திக் கொண்டதற்கு பிறகே அன்னாரை அவன் பால் திரும்ப பெற்று கொள்வது. அல்லாஹ்வின் தூதர் என்பது ஒரு விவசாயியைப் போன்றே ஆவார். விவசாயிக்கு நன்கு தெரியும் தனது விதைகளை வளரச் செய்வதற்கும் அது வழியாக நாளை நற்பலன் பெற்றுக் கொள்வதற்கும். தனது தோட்டம் நல்ல நிலையில் தானோ என விவசாயி எப்போதும் பார்வை இடுவார். அவனது அனைத்து முயற்சிகளும் அதன் பால் ஈடுபடுத்திக் கொள்வார். ஒரு பெரிய பிரச்சனையினை மிக சிறுதாக காண்பது, ஒரு மன நிலைச் சிறப்பாகும். ஒரு பிரச்சனையினை மலையளவிற்கு பெரிதாக உள்ளத்தில் எண்ணலாம். ஆனால் நல்ல மனமுடையவர்களுக்கு அதை மிக சிறுதாக கண்டுக் கொள்ள முடியும். உதாரணமாக கூறினால் எரிப்பு வாய்ந்த ‘‘கபாப்’’ சாப்பிடும் ஒருவரின் கண்களில் இருந்து நீர் வடிவது காணலாம். அதைப் பார்க்கின்ற ஒருவர் மிக பெரிய வருத்தம் அவன் அனுபவிக்கின்றான் என எண்ணலாம். ஆனால் அது சாப்பிட்டுக் கொள்கின்றவர் மிக சுவையாக அதை ரசித்துக் கொள்கின்றான். ஆனால் பார் வையாளருக்கு அதைப் புரிந்துக் கொள்ள முடியவில்லை. அதைப் போன்றே நாம் காண்கின்ற வெளிப்படையான ஒரு துயரம் உட்படையான ஒரு துயரத்திற்கு காரணமாகாது. தக்வாவின் நிலை உயர்வதைப் பொறுத்து அதற்கு மாற்றம் எற்பட்டுக் கொள்ளும். எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு தக்வாவுக்கு உட்பட்ட வாழ்கை நடத்திக் கொள்ள வேண்டும் என்பதாகும். அல்லாஹ்வின் கருணையினை பெற்றுக் கொள்வதற்கான ஒரேயொரு வழி தக்வா மட்டுமேயாகும். வெற்றி பெற்றிட தீனுக்கு ஏற்றவர் கட்டுப்பட்டு செயல்பட வேண்டும்.

தக்வா என்பது அருள்களுடையவும் நன்மைகளுடையவும் வாயிலை திறந்துக் கொள்கின்ற ஒன்றாகும். அது மூலமாக இறை பாதுகாவல் கிடைக்கின்றது. எல்லாம் வல்ல அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

**‘‘எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்கின்றாரோ அவருடைய காரியத்தை அவன் எளிதாக்குகின்றான். (65-34)**

அதனால் ஒரு முத்தகியை விட பொருளும் சுகமும் அனுபவிப்பவர் மற்றொருவருமில்லை. ஒருவர் எந்த அளவிற்கு முத்தகியாகின்றாரோ அந்த அளவிற்கு அவருக்கு தூய்மையான வாழ்கை நடத்திக் கொள்ள முடிகின்றது. அதில் எவ்வித சந்தேகவும் இல்லை. அருள் நிறைந்த இஸ்லாமின் சூபியாக்கள், பக்தர்கள் இவ்வாறு கூறியிருந்தனர். அதாவது சூபியாக்களும், பக்தர்களும் இதயத்தில் மறைத்து வைத்துக் கொள்கின்ற பொருளும் சுகவும் அரசர்கள் அறிந்திருந்தால் கண்டிப்பாக அந்த சூபியாக்களை அவர்கள் தாக்கியிருந்திருப்பார்கள். அறிவற்றவர்களின் கண்களில் விலையும் நிலையும் இல்லாத ஒன்றாகவே இந்த பொருளையும் சுகத்தையும் தெரிவது. அல்லாஹ்வின் நண்பனின் சுக வாழ்விற்கு கேடுவிளைவிக்கின்றதாகும் இந்த பௌதீக மேன்மைகள்யாவும். அதனால் அதையனைத்தையும் தவிர்த்துக் கொள்ள அவர்கள் முயற்சிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) க்கு ஏராளமான பொருள்கள் கிடைத்திருந்தது. உதாரணமாக 10,000 திர்ஹம். ஆனால் இரவு வரையில் அதை தன் மனைக்குள் வைத்துக் கொள்ள அவர் அனுமதித்ததில்லை. இந்த பொருள்களை செலவு செய்வதற்கு தாமதம் எற்பட்டதில்லை. ரமலான் மாதத்தில் கூட சிறு அளவிலான பொருள் வீட்டில் பாதுகாத்துக் கொண்டதில்லை. நோன்பு திறப்பதற்கு கூட அவரது வீட்டில் எதுவும் எஞ்சியதில்லை என்பது ஒரு உண்மையே ஆகும்.

ஒரு முறை ஹஸ்ரத் தல்ஹா இப்னு உபைதுல்லா (ரலி) அவர்கள் வீட்டில் கவலையோடும் வருத்தத்தோடும் வந்தார். அன்னாரின் மனைவி விஷயத்தைக் குறித்து விசாரித்தார். அன்னார் கூறினார், நமக்கு ஏராளமான செல்வம் இருக்கின்றது. அது என்னை மிக கவலைப் படுத்துகின்றது. இதை கேட்ட மனைவி கூறினார். அந்த செல்வத்தை ஏனையவர்களுக்கு வழங்கிட வேண்டும். அப்படி அன்னார் ஒரு திர்ஹம் கூட எஞ்சாத நிலையில் அனைத்தும் ஏனையவர்களுக்கு வழங்கினார். அந்நாளில் ஹஸ்ரத் தல்ஹா 40,0000 திர்ஹம் வழங்கினார். அதை போன்றே வேறோரு சந்தர்பத்தில் ஹஸ்ரத் தல்ஹா(ரலி) அன்னாரின் பூமியை விற்பனை செய்து கிடைத்த 70,00,000 திர்ஹம் கைவசம் இருக்கும் காரணத்தால் தூங்கிக் கொள்ள முடியதா தவித்தார். மறுநாள் அதை மக்களுக்கு வழங்கி கொள்வேன் என உறுதி எடுத்தார். எல்லாம் வல்ல அல்லாஹுவுக்கு முழுமையாக கட்டுப்படுவதில் மட்டுமே ஒருவரின் வாழ்கை மகத்துவமும் மேன்மையுடையதுமாக பரிணமிக்கின்றது. எந்த அளவிற்கு அவன் தீன் விஷயங்களில் அர்ப்பணம் செய்கின்றானோ அந்த அளவிற்கு அல்லாஹ்வின் பார்வையில் அவன் மதிப்புடையவனாக இருக்கின்றான். திருக்குர் ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.

**‘‘உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ அவரே அல்லாஹ்விடத்தில் மிக்க கண்ணியமானவன்’’ (49-14)**

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் நபி(ஸல்) வின் திருசுன்னத்திற்கும் ஏற்றவார், இந்த தற்காலிகமான உலகில் எவர் ஒருவர் வாழ்கின்றாரோ, அவரின் வாழ்க்கை கண்ணிய மிக்கதும் மகத்துவமுடையதுமாகும் என்பதில் எவ்வித அய்யவுமில்லை. இந்த இயற்கையில் ஒவ்வொரு ‘‘அணுக்களையும் படைத்துள்ள அல்லாஹ்வின் விதியே ஆகும் இது. அல்லாஹ் அரியணையில் அமர செய்த ஒருவரை அதில் இருந்து விலக்கிக் கொள்ள எந்த சக்திக்கும் இயலாது. அல்லாஹ் கண்ணியப் படுத்திய ஒருவரை அவமானத்திற்கு ஆளாக்கிட எந்த சக்திக்கும் முடியாது. தீன் வழியாக பயணம் மேற் கொள்கின்றவனை காத்திருப்பது நிரந்தரமான ஆதரவாகும். அல்லாஹ் அந்த நபரினில் சாந்தியினை வழங்குகின்றான். அந்த சாந்திக்கு கேடுவிளைவிக்க எந்த ஓர் படைப்பினத்திற்கும் இயலாது.

உண்மையும் நிரந்தரவுமான சுகம் தீனில் மட்டுமே குடிக் கொள்கின்றது. ஒரு மனிதனுக்கு தேவையான அனைத்து நன்மைகளும் தீனில் உண்டு. அல்லாஹ்வின் திருப்திக்கு ஏற்றவார் ஒரு நபர் தனது அனைத்து ஆசைகளும் தவிர்த்துக் கொள்ளும் பொழுது அல்லாஹ் அவனது உற்றவனும் உடையவனுமாக மாறுகின்றான்.

அதனால் நாம் ஒவ்வொருவரும் அது ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் ஆனாலும் சரி, பொது இஸ்லாமில் ஆனாலும் சரி நமது ஆன்மாவை தூய்மைப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். அப்படி அல்லாஹ் நம்மிடத்தில் திருப்தியடைந்திடட்டும்! இந்த நிலையில் எட்டிட மிக சிறந்த அளவிலான முயற்சிகளும் செயல்களும் எனது தோழர்கள் மேற் கொள்கின்றார்கள் என்பது மிக மகிழ்சியுடைய விஷயமாகும். அல்லாஹ் அவர்களின் செயல்களை ஏற்றுக் கொண்டு அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவானாக! அவர் அல்லாஹ்வின் உண்மையான அடியார்களாக திகழட்டும்., சிறு நேரத்திற்கான இந்த உலக வாழ்கைளிலும் அவ்வாறே மறு உலக வாழ்க்கையிலும். ஆமீன்.


**Issued by:**
Jamaat-UI-Sahih-Al-lslam
Dawa Department
Tamilnadu (Regd.No:A/693
Web: www.jamaat-ul-sahih-al-islam.com



Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamil Nadu
Cell: 9947181650
9789180817